பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஸ்ரீ சித்திரை 30 மீ திங்கட்கிழமை [13—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 160

## முல்லைத்தீவு அரச அதிபராக தர்மகுலசிங்கம்

யாழ்ப்பாணம், மே 13

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதிய அரச அரச அதிபராக திரு. எஸ். தர்மகுலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிவித்தல் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திரு. தர்மகுலசிங்கம் தற்பொழுது முல்லைத்தீவு மாவட்டத்தின் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகிறார். [ஓ-126]

### தீர்வுக்கு புதிய யோசனைகளை முன்வைத்து

# துணிந்து செயலாற்ற பிரேமாவுக்கு வாய்ப்பு!

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் குறித்து அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதிய யோசனைகளை முன்வைத்து, துணிந்து செயற்பட ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்திருக்கும் பெருவெற்றி இந்த வாய்ப்பை அவருக்கு வழங்கியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

''தனது அரசின் நடவடிக்கைகளை ஏற்று, அதனை உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் மூலம் மக்கள் அங்கீகரித்தால்—

அதனைக் கொண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண உரிய நடவடிக்கைகளை எடுப்பேன்''— என்று ஜனாதிபதி பிரேமதாஸா தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அடிக்கடி உரையாற்றி வந்தது குறிப்பிடத்தக்கது.

''இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது. பேச்சுக்கள் மூலமே தீர்வு காணலாம். அதுவே எனது நம்பிக்கை'' — என்றும் அவர் கூறி வந்தார்.

இந்த நிலையில் அவரது கட்சி தேர்தல்களில் பெருவெற்றி கிடைத்திருப்பது, துணிச்சலாக நடவடிக்கை எடுத்து, இணக்கமான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்த அவருக்கு வாய்ப்பளித்திருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். [உ]

## புளியங்கூடலில் நேற்று மாலை மோதல்

யாழ்ப்பாணம், மே 15

புளியங்கூடல் வடக்கு ஒழுங்கை பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் திடீரென மோதல் மூண்டது.

இப்பகுதியில் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், கலிபர் வேட்டுக்களும் கேட்டபடி இருந்தன.

அதேசமயம் வேலணை, சரவணை, பள்ளம்புலம், புளியங்கூடல் பகுதிகளை நோக்கி அடுத்தடுத்து ஷெல் வீச்சுக்களும் நடத்தப்பட்டன.

இது இவ்வாறிருக்க, நேற்று மாலை 4 மணியளவில் நாரந்தனைப் பகுதியில் புகை மண்டலம் தெரிந்தது.

இப்பகுதியில் நேற்றும் படையினரால் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்பட்டது. [ஓ-125]

## வயோதிப மாதுவின் சடலம் சரவணைப் பகுதியில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 13

சரவணை மேற்கில் இருந்து வயோதிப மாது ஒருவரின் சடலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

நாகலிங்கம் சின்னம்மா (62 வயது) என்பவரே அந்த பெண்மணியாவார்.

இப்பகுதியில் இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற போது, நோய்வாய்ப்பட்டிருந்த இந்தப் பெண், அங்கிருந்து வெளியேற முடியாது இருந்தார் என்றும்—

உணவு, மருத்துவ வசதி இல்லாத நிலையில் இவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

நேற்று வீடு பார்க்கச் சென்றவர்கள், இவரது சடலத்தை மீட்டெடுத்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-125]

## ஆனையிறவு பகுதியில் நேற்று கடும் வான் தாக்கு!

ஆனையிறவு முகாமை அண்டிய பகுதிகளில் நேற்று மாலை கடும் விமானத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று மாலை 4 மணி முதல் இருளும் நேரம் வரை ஒரு பொம்மர், மூன்று ஹெலிக்கொப்டர்கள் என்பன இப்பகுதியில் மாறி மாறி தாக்குதல் நடத்திய வண்ணம் இருந்தன.

விமானத் தாக்குதல் குண்டுச் சத்தங்கள் நீண்ட தூரத்துக்குக் கேட்டன. [உ-126]

## வாகனேரியில் வயல்செய்ய ராணுவம் தடை

யாழ்ப்பாணம், மே 13

மட்டக்களப்பு வாகனேரிப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் வாகனேரிக் குளத்தில் இருந்து விவசாய நிலங்களுக்கு, தண்ணீர் செல்வதைத் தடை செய்துள்ளனர்.

அதேசமயம் குளத்தில் மீன் பிடிக்கவும் இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர்.

குளத்தில் இருந்து தண்ணீர் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதால், காலபோக வேளாண்மை அழிந்துபோகும் நிலை தோன்றியுள்ளது.

வேளாண்மைக்குத் தயார் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான நிலமும், நெல்லும் நாசமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. [ஓ]

### முச்சந்தி முரளி



துணிஞ்சு செய்வாரோ, இல்லாட்டி படைக்கு பணிஞ்சு போவாரோ...... இருந்து பாப்பம்......!

### ★ தென் பகுதி உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

# ஐ. தே. கவுக்கு அமோக வெற்றி; 80 வீத சபைகளை கைப்பற்றியது!

கொழும்பு, மே 13

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமோக வெற்றி கிடைத்திருக்கிறது.

மொத்தம் உள்ள 237 உள்ளூராட்சி சபைகளில் 190 சபைகளை - அதாவது 80 வீதமான சபைகளை - ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றிக் கொண்டது.

பத்து மாநகர சபைகளில் ஒன்பதிலும், 33 நகர சபைகளில் 28 இலும், 194 பிரதேச சபைகளில் 153 இலும் ஐ. தே. கட்சி வென்றது.

பறிகொடுத்த உள்ளூராட்சி சபைகளிலும் அனேகமானவற்றில் வெற்றி பெற்ற எதிர்க்கட்சிகளுக்கு நிகரான அளவுக்கு கணிசமான வாக்குகளை ஐ. தே. க. பெற்றிருக்கிறது.

''இந்தத் தேர்தலில் ஐ. தே. க. அடைந்த அமோக வெற்றி, ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி'' — என்று ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுத் தெரிவித்தார். [உ-எ]

# தேர்தலில் முறைகேடு என்கிறார் பிரிட்டன் தூதர்!

## 'உள்விடயத்தில் தலையிடாதீர்' என அரசு சாட்டை!!

கொழும்பு, மே 18

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் முறைகேடு நடந்ததாக கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாட்ஸ்டன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பிரிட்டிஷ் தூதுவர் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகிறார் என்றும், அதனை அனுமதிக்க முடியாது என்றும் ஐ. தே. கட்சி கூறியிருக்கிறது.

திகவல்லை பகுதியில் உள்ளூராட்சி தேர்தலில் வாக்களித்த ஐ. தே. க. ஆதரவாளர்கள் தங்கள் கைகளில் பூசப்பட்ட தேர்தல் மையை அழித்து முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்று திரு. டேவிட் கிளாட்ஸ்டன் புகார் செய்துள்ளார்.

இது குறித்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி பிரிட்டிஷ் தூதரகத்திடம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து உள்ளது.

திகவல்லை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எச். ஆர். பியசிறி, பிரிட்டிஷ் தூதர் திரு. கிளாட்ஸ்டன் போதைக் கடத்தல்காரர்களுக்கு உடந்தையாக இருக்கிறார் என்று அண்மையில் நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதற்குப் பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கையாகவே திரு. கிளாட்ஸ்டன், திரு. பியசிறியின் தொகுதியான திகவல்லையில் தேர்தல் முறைகேடு நடந்ததாகக் கூறுகிறார் என்று ஐ. தே. கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. - அ.தி.மு.க. இரு கட்சிகளுமே ஈழ விடயத்தில் அலட்சியப் போக்கு!

ஈழத் தமிழர் விவகாரம் குறித்து தமிழகத்தில் பிரதான அரசியல் கட்சிகளின் அணுகு முறைகள் எவ்வாறு உள்ளன?— என்பது குறித்து வெரித்தாஸ் வானொலியின் "உண்மையின் எண்ணங்கள்" பகுதியில் ஒலிபரப்பான விமர்சனம் இங்கே தரப்படுகிறது.

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழகத்தில் சோகம் பிறப்பதைவிட ஒருவித விரக்தி நிலையையே காண முடிகிறது.

தினம் தினம் அடிபாளித் தமிழர்கள் இலங்கையில் மடிவதைக்கூட இந்திய தகவல் தொடர்பு சாதனங்கள் எடுத்துரைப்பதில்லை.

ஈழப் போராளிகள் குறித்து ஒருவித தவறான பிரசாரம் நடத்தப்படுவதாக உணரமுடிகிறது.

குறிப்பாக — தி. மு. க. அரசு கலைக்கப்பட்ட பின்னர் அதனை நியாயப்படுத்து- முகமாகப் போராளிகளை மோசமாகச் சித்தரிக்க அரசு ஆதரவு பெற்ற சமூகத் தொடர்பு சாதனங்களும் பத்திரிகைகளும் முயற்சித்து வருகின்றன.

இம்முயற்சியில் இதுவரை இவர்களின் பக்கம் வெற்றி என்று கூடச் சொல்லலாம்.

தமிழர்களுக்காக போராளிகள் ஆயுதப்போர் நடத்துகிறார்கள் என்ற சிந்தனையை விட, அவர்கள் அதிகார ஆசையுடன் போரிடுகின்றார்கள் என்ற நச்சுக்கருத்து தமிழகத்தில் விதைக்கப்பட்டுள்ளது.

மக்களுக்குத் தெரியாது

★ இந்திய அமைதிப் படையை ஏன் விடுதலைப் புலிகள் எதிர்த்தார்கள்?

★ இந்திய அமைதிப்படை ஏன் இலங்கை சென்றது?—

★ இந்திய அமைதிப்படை இலங்கை சென்றதன் உள் நோக்கம் என்ன?

★ இந்திய அமைதிப் படையைத் திரும்பிப்போ என்று இலங்கை அரசு ஏன் கூறியது?

— இவைபோன்றவற்றுக்கு சரியான காரணங்களோ பின்னணிகளோ தமிழக மக்களுக்கு வழங்கப்படவில்லை தெரியப்படுத்தப்படவில்லை.

தி. மு. க. அரசு பதவியில் இருந்தபோது அதற்கு இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க கிடைத்த வாய்ப்புப் போன்று இன்னொரு முறை அவ்வாய்ப்புக் கிடைக்குமோ என்பது சந்தேகமே.

கண்கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போன்று அதிகாரம் இருக்கும்போது ஏதும் செய்யாமல், அதிகாரம் போன பின்னர் ஈழத் தமிழருக்குக் குரல் கொடுப்பதாக தி. மு. க. தனது தேர்தல் அறிக்கையில் ஒருவரி சேர்த்துள்ளது வேடிக்கையாக உள்ளது.

அ. தி. மு. க. தனது தேர்தல் அறிக்கையில் "இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர புதிய கௌரவ ஒப்பந்தம் ஒன்று இலங்கை அரசுடன் ஏற்படுத்தவும் தமிழர் இன்னல்தீர தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்"—என்று கூறப்பட்டுள்ளது.

ஊறுகாய் தொடுதல்

அ. தி. மு. க. வும் இலங்கைப் பிரச்சினையை ஒரு ஊறுகாய் போலத்தான் தொட்டுள்ளதே தவிர பிரச்சினையின் ஆழத்தை அறியவோ, அனுதாபப்படவோ இல்லை.

ஆகவே அ. தி. மு. க வோ அல்லது தி. மு. க வோ ஆட்சிக்கு வந்தாலும் இலங்கைப் பிரச்சினையில் இவர்கள் அனுதாபம் காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்போமானால் கீழ் வரகில் நெய்வடியும் என்று எதிர்பார்க்கும் முட்டாள்களாக ஆவோம்.

ஜெயவர்த்தனாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை பிரேமதாஸா உதாசீனப்படுத்தியதும், இந்திய அமைதிப்படையை திரும்பிப்போ என்று அவர் கூறியதும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு தீராத வடுக்களாக உள்ளன.

பிரேமா ராஜீய உறவு

எனவே இந்திரா காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், பிரேமதாஸா அரசு மீது ராஜீவ்காந்தி கடுமையான போக்கை மேற்கொள்ளக் கூடும்.

'எதிரியின் எதிரி எனக்கு நண்பன்' என்பதைப்போல, இலங்கை அரசுடன் கோபமாக இருக்கும் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் நண்பனாக்கிக் கொள்ள நினைக்கக்கூடும்.

ஜூன் மாதத்திற்குள் வடக்கில் விடுதலைப் புலிகளை பின்னடையச் செய்ய இலங்கை இராணுவம் திட்டமிட்டுள்ளது. இது சரி வந்தால் புலிகளுடன் ஜூன் முதல் கொழும்பு அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்று தெரிகிறது.

எனினும் ஜூன் மாதத்திற்குள் விடுதலைப் புலிகளை இராணுவத்தால் தோற்கடிக்கலாம் என்பது சாத்தியமான ஒன்றல்ல என்று கருதப்படுகிறது. [அ-எ]

கொழும்பில் தேங்கிக் கிடந்த

## கற்பித்தல் உபகரணங்கள் கப்பலில் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், மே 13

யாழ். பல்கலைக்கழகத்துக்கென வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு— கொழும்பில் கடந்த ஒன்பது மாதங்களாக தேங்கிக்கிடந்த — பெறுமதிமிக்க கற்பித்தல் உபகரணங்களில் ஒரு பகுதி இங்கு வந்து சேர்ந்துள்ளது.

வைத்திய, விஞ்ஞான பீடங்களுக்கான இந்த முக்கிய உபகரணங்கள் கடந்த ஒன்பது மாதங்களாக அங்கு தேங்கிக் கிடந்தன.

கப்பலில் கொண்டுவரப்பட்ட உபகரணங்கள் அந்தந்த பீடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் முன்னர் தடை செய்யப்பட்டிருந்த— விவசாய பீடத்துக்குத் தேவையான சில இரசாயனப் பொருள்களும் எடுத்துவரப் பட்டுள்ளன. [ஓ-3]

## இரு பிரதேச சபைகளை இ. தொ. கா. வென்றது!

கொழும்பு, மே 13

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இரு பிரதேச சபைகளைக் கைப்பற்றியது.

ஒன்று அம்பகமுவ பிரதேச சபை. மற்றது நுவரெலியா பிரதேச சபை.

இந்த இரு பிரதேச சபைகளிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிட்டிருந்தது. இந்த இரு பிரதேச சபைகளிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக 29 உறுப்பினர்கள் தெரிவாகி உள்ளனர்.

தேர்தல் முடிவுகள் வருமாறு:

அம்பகமுவ பிரதேச சபை

★ இ. தொ. கா.
— 30,190 வாக்குகள்
— 14 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க
— 13 622 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ சுயேச்சைக் குழு - 1
— 7,004 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

நுவரெலியா பிரதேச சபை

★ இ. தொ. கா.
— 21,104 வாக்குகள்
— 15 உறுப்பினர்கள்

★ சுயேச்சைக் குழு - 1
— 15,622 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

★ பகுஜன நிதஹஸ் பெரமுன
— 2,673 வாக்குகள்
— 1 உறுப்பினர்

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலாம்பிகை ஆறுமுகம்

திருமதி நகுலாம்பிகை ஆறுமுகம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆறுமுகம் [Clerk of Works - Railway F.M S] அவர்களின் அன்பு மனைவியும், அன்னரத்தினதேவி, இந்திராணி, ஞானரஞ்சிதமலர், சிவகுமார் [சிறைச்சாலை உத்தியோகஸ்தர்] ஆகியோரின் அருமைத் தாயாரும், Dr. K நடராசா, திரு. K. கணேசராசா [C W O சிறைச்சாலை], திரு M. முத்துக்குமாரசூரியர் [தேயிலைத் தொழிற்சாலை அதிகாரி], சிவஞானம் [மலர்] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [13-5 91] திங்கட்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது மூளாய் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
ஆ. சிவகுமார்
[மகன்]

மூளாய்.
[16808]

## உணவுப் பொருள்களுக்கு நெடுந்தீவில் தட்டுப்பாடு

நெடுந்தீவு, மே 13

நெடுந்தீவில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு மேலும் அதிகரித்து வருகிறது.

இங்குள்ள கூட்டுறவுச் சங்கம் உட்பட அனைத்து வியாபார நிலையங்களும் வெறுமையாகக் காணப்படுகின்றன.

நெடுந்தீவுக்கு உணவுக்கப்பல் ஒன்றை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியான போதும் இதற்கான அறிகுறி எதுவும் இதுவரை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஏற்பட்டது போன்று மீண்டும் ஒரு பட்டினி நிலையை பொதுமக்கள் எதிர் நோக்க வேண்டியுள்ளது என்று கூறப்படுகிறது. [இ-111]

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா சண்முகநாதன்

[இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், வவுனியா]

பொன்னையா சண்முகநாதன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், முத்தம்மா [அரசினர் வைத்தியசாலை, புங்குடுதீவு] அவர்களின் அன்புக் கணவரும், கமலராணி, மாலினி [பிரான்ஸ்], இராஜேஸ்வரி [கனடா], சசிகுமார் [சுவிஸ்], ஜெயகுமார் [சுவிஸ்], சிவகுமார் [சிங்கப்பூர்], கலைச்செல்வி ஆகியோரின் அன்புத்தந்தையும், குணேந்திரன் [கனடா], ஜெயகுமார் [பிரான்ஸ்], திவ்வியநாதன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந், தர்சிகா [பிரான்ஸ்], தட்சாயினி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்ற முத்தையா இராசம்மா தம்பதிகளின் மருமகனும், சிவரெத்தினம் [சஜபால் ஹோட்டல், கொழும்பு-13], சாந்தகுமாரி, செல்வகுமார் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சண்முகலிங்கம், சரோஜா, தர்மராணி, குணராசா, வீரலட்சுமி [பிரான்ஸ்], செல்லையா [சுவிஸ்] ஆகியோரின் மைத்துனரும், சரஸ்வதி, தனேந்திரன், வடிவாம்பிகை ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்று 13-05-1991 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் புங்குடுதீவு, மணற்காட்டு மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி முத்தம்மா சண்முகநாதன்.
[மனைவி, மக்கள், மருமக்கள்.]

[16806]

### இளையதம்பி சீனிவாசகம்

[பிரபல ஆயுள்வேத வைத்தியர்]

சட்டநாதர் றோட், திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த இளையதம்பி சீனிவாசகம் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற இளையதம்பி, பொன்னம்மா ஆகியோரின் மூத்த புதல்வனும், பூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மலிங்கம், பாக்கியம் ஆகியோரின் சகோதரனும், வாமாம்பிகாதேவி, கமலாம்பிகாதேவி [ஜேர்மனி], ஸ்ரீ மகாதேவன் [வேலைப் பரிசோதகர், கச்சேரி, முல்லைத்தீவு], வாமதேவன் [ஜேர்மனி], குகதேவன், நகுலா, விமலா, ரகுதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்தானகோபால், Dr பொன்னையா [ஜேர்மனி], அழகம்மா [ஆசிரியர், கலைமகள் வித்தியாலயம், மயிலிட்டி], ஆகியோரின் மாமனாரும், பிறேமச்சந்திரன் [சுவிற்சிலாந்து], பிரமிளா, ரஞ்சனி, சர்மிளா, யஸ்மிளா, தர்பனா, கனோஜனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 13-5-91 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்,
சீ. ஸ்ரீமகாதேவன்,
[மகன்]

சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
[16805]

### திருமதி இராசமணி தம்பு

சாவகச்சேரி தபாற்கந்தோரடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசமணி தம்பு 12 - 5 - 1991 காலை 7 மணிக்கு காலமானார். இவர் வேலுப்பிள்ளை தம்பு [Retired Assessor - Inland Revenue]யின் அன்பு மனைவியும், இராஜஇராஜேஸ்வரி, ரட்னேஸ்வரி, மனோகரி, ரஞ்சினி, லலிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருஞானசம்பந்தர், சிவானந்தநாயகம், இராமச்சந்திரன், மனோகரன், ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற செல்லத்துரை, காலஞ்சென்ற செல்வரட்ணம், திருமதி செல்வமணி ஆறுமுகம், திருமதி அமிர்தாம்பிகை இராஜநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
T. அரியரட்ணம்

தபாற் கந்தோர் அருகாமையில்,
சாவகச்சேரி.
[16803]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LONDON EXAMS

**Nov., Dec. 1991**

| | | ஆரம்பம்: |
|---|---|---|
| **C.I.M.A.** (I.C.M.A.) | Stage 1 | 18-05-91 |
| | Stage 2 (I.C.M.A. Only) | 01-06-91 |
| **I.D.P.M.** (Computer) | Part 1 | 18-05-91 |
| **A.A.T.** | Stage 1 | 18-05-91 |
| **I.A.B.** | Foundation | 18-05-91 |
| | Intermediate | 18-05-91 |
| | Final | 08-06-91 |
| **Computer** | **Basic** | 23-06-91 |

லண்டன் நிறுவனங்களுடன் செய்யவேண்டிய பதிவுகள் எங்களால் செய்து தரப்படும்.

விரிவுரையாளர் குழு:
சத்தியதாஸ், சிவலிங்கம், மதி, சிவபாதசுந்தரம், கந்தையா, நவரேந்திரன், புஷ்பா, யோசப்.

மேலும் விபரங்களுக்கு!

## SCHOOL OF BUSSINESS ADMINISTRATION

[O.L.R. தேவாலய மேற்குப் பக்கம்]
16, 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
[இ-5053]


# யாழ். போதனா வைத்தியசாலை
# வெளிநோயாளர் பிரிவில்
# மருந்துத்தேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 13
யாழ். போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் மருந்துத்தேவை தற்போது பல மடங்காக அதிகரித்துள்ளது.

சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் தீவுப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்து யாழ். நகரப் பகுதிக்கு வந்திருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு சுகாதாரப் பிரச்சினைகளும் இருப்பதால், யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்குச் சிகிச்சைக்கு வருபவர்களில் இவர்களும் கணிசமான அளவில் அடங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தினமும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான நோயாளிகள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதால் வெளிநோயாளர் பிரிவு மருந்துத் தேவை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-15]

## அகதிகளுக்கு லக்ஸ்பிறே

நவாலி, மே 13
இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் அகதிகளாக தங்கியிருப்பவர்களுக்கு மேலதிக லக்ஸ்பிறே பால் மா வழங்கப்படுகிறது.

பண்ணாகம் வழக்கம்பரையில் தற்காலிகமாக அமைந்துள்ள காரைநகர் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம் ஆகியவை இலவச லக்ஸ்பிறே மாவை வழங்குகின்றன.

பங்கீட்டு அட்டையில் உள்ள குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கையின்படி ஐந்தும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கு நான்கு பைக்கெட்டுகளும், மூன்றும், நான்கும் கொண்ட குடும்பத்துக்கு மூன்று பைக்கெட்டுகளும், இரண்டு அங்கத்தவர்களுக்கு இரண்டு பைக்கெட்டுகளும் ஓர் அங்கத்தவருக்கு ஒரு பைக்கெட்டும் வழங்கப்படுகிறது. [இ-100]

## இலவசம்

யாழ்ப்பாணம், மே 13
மஞ்சள்காமாலை நோய்க்கு மருந்தாக உதவும் கரிசலாங்கண்ணி துண்டங்கள் வீடுகளில் வளர்ப்பதற்காக மில்க்வைற் ஸ்தாபனத்தாரால் இலவசமாக வழங்கப்படுகின்றன. [இ-3]

## 141 மீறல் சம்பவங்கள்

கொழும்பு, மே 13
தென்பகுதியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களின் போது 141 தேர்தல் சட்ட மீறல் சம்பவங்கள் இடம் பெற்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-ஏ]

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு சீருடை

யாழ்ப்பாணம், மே 13
யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்களுக்கு இவ்வருடத்துக்கான சீருடைகள் வழங்கப்படுகின்றன.

இதே வேளை, கடந்த வருடத்துக்கான சீருடைகள் வழங்கப்படாதது குறித்து வைத்தியசாலை நிர்வாகம் கொழும்பு தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. [இ-15]

## உதவிப் பணம்

நெடுந்தீவு, மே 13
கடந்த டிசம்பர் மாதத்திற்கான அரசாங்க உதவி நன்கொடைப் பணம் நெடுந்தீவில் இன்று திங்கட்கிழமை வழங்கப்படும்.
[இ-111]

## சர்வதேச சிறுவர் நிதிய பரிசு

யாழ்ப்பாணம், மே 13
சர்வதேச சிறுவர் நிதியத்தால் 1989ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற தடுப்பூசி ஏற்றும் போட்டி முடிவுகள் இப்போது வெளிவந்துள்ளன.

இப்போட்டியில் காரைநகர் கோவளத்தைச் சேர்ந்த சக்திவேல் சத்தியரூபன் என்ற குழந்தை தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை மேற்படி தங்கப் பஞ்சாயத்துப் பதக்கத்தை தமது பணிமனையில் வைத்து பிரஸ்தாப குழந்தைக்கு வழங்கினார். [இ-18]

## சேவை நலம் பாராட்டும் வரவேற்பும்

யாழ்ப்பாணம், மே 13
அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் யாழ். இந்துக் கல்லூரிக்கு அதிபராக மாற்றலாகிச் சென்றுள்ளதையும், திரு இ. மகேந்திரன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபராகப் பதவி ஏற்றுள்ளதையும் முன்னிட்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேவை நலம் பாராட்டு விழாவும் வரவேற்பு வைபவமும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
[இ]


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 - 01 - 1950
மறைவு: 07 - 05 - 1986
திதி: 13 05 - 1991

அமரர்
## இளையதம்பி அம்பிகைபாகன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் நினைவுடன் வாழும்;
அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.
(16695)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 24 - 01 - 1924
உதிர்வு: 14 - 05 - 1988

## அமரர் சவரிமுத்து அம்புறோஸ்
(ஓய்வு பெற்ற E. O. A. யாழ். கச்சேரி)

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 14 - 05 - 1991 காலை 6-00 மணிக்கு யாழ் அடைக்கல மாதா தேவாலயத்தில் இரங்கற் பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவர் பிரிவை மறவாத
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(16800)

# ECALOM
(மனோகரா சந்தி)

வர்த்தகமும் நிதியும் **திரு. வரதன்**
வினா - விடை வகுப்பு
[91 A/L]

கணக்கியல் **திரு. சௌந்தி**
[91 A/L]
பங்குடமை முடிவுக் கணக்கு,
கம்பனி முடிவுக் கணக்கு
வினா - விடை வகுப்புகளும்
[4060]

# *New Science Academy*
**Jaffna**

## 91 A/L
## DAY CLASS

**CHEMISTRY**
By
**திரு. சண்முகசுந்தரம்** B. Sc.

| | Tue., Wed., Thu. |
|---|---|
| PHYSICAL | — 8-00 — 9-00 |
| ORGANIC | — 9-00 — 10-00 |
| IN-ORGANIC PAPER | — 10-00 — 11-00 |

## 92 A/L

| | Tue., Wed., Thu. |
|---|---|
| IN-ORGANIC | — 6-30 — 7-30 |

**ஆரம்பம்: 14-05-1991**

**PHYSICS**
By
**திரு. நந்தகுமார்** B. Sc.

Tue., Wed., Thu. — 11-00 — 12-00
ELECTRICITY
Tue. — 4-00 — 6-00 Wed. 5-00 — 6-00
ELECTRO MAGNETISM

**ஆரம்பம்: 14-05-1991**
(சி-5055)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆரம்ப சுகாதார வழி காட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P, D C. H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதி யாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம்: விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

### ரைப்பிங் வகுப்புகள்

தமிழ் [புதிய விசைப் பலகை New Key Board] ஆங்கிலம் ரைப்பிங் புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன, பியூடோ, 39/17. மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [பஸ்நிலையமுன்பாக] கிளை: பிரதான வீதி, மானிப்பாய். [சி/4968]

### ஆங்கிலக் கல்வி

G. C. E. [O/L] 90 ஆங்கில வினாத்தாள் விசேட வகுப்புகளும், ஆண்டு 1, 2, 3, 4 களுக்கான சொற்பொழிவுக் கலையும் [Elocu-tion] மாணவர்களின் வசதிகளுக்கேற்ப விரைவில் ஆரம்பமாகவுள்ளன. By Manjula Balasingam 81/2, அம்மன் வீதி, சந்தர்மடம். [16787]

### வைத்தியம்

வேலணை வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் ஜே. பி. அவர்கள் இல. 121, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் வைத்திய சாலைக் கிளையை ஆரம்பித்துள்ளார். சகல நோய்களுக்கும் எந்நேரத்திலும் சிகிச்சை அளிக்கப்படும் [4067]

### நீமியா உரம்

பயிர்களுக்கு ஊட்டமளிக்கும் அடிக்கட்டு உரமாகவும், பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பூச்சி பீடை கொல்லியாகவும் பயன்படுத்தப்படும் நீமியா உரம் மீண்டும் விற்பனைக்கு கிலோ பைக்கெட் ரூ 10-00 மட்டுமே இணுவில், திருநெல்வேலி, யாழ்நகர் அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கும். மில்க்வைற், யாழ்ப்பாணம். [கி-4992]

### தவறிவிட்டது

யோசேப்பு ஜஸ்மின் டெலினா ஆகிய எனது அடையாள அட்டை [657781045V] கொய்யாத் தோட்டத்துக்கும் பாஷையூருக்கும் இடையில் 27 - 4 - 1991 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். [16800]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமந்தர் நோவு எண்ணெய் எஸ் ரி மெடிக்கல்ஸ் 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4051]

## ● பந்தயமாக யானையும்

தென் பகுதியில் கடந்த சனிக்கிழமை நடந்த உள்ளூராட்சித்தேர்தல்களின் போது அரசியல் கட்சி ஆதரவாளர்கள் புதுவிதமான பந்தயங்களை பிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யானை, பஸ், கார், இரத்தினக்கற்கள் ஆகியனவும் பந்தயப் பொருள்களில் அடங்கி இருந்தனவாம். [இ-எ]

---

# SHAMROCK ACADEMY

**Chundikuli, Jaffna.**

## வர்த்தகமும் நிதியும்
(Commerce & Finance)

- பிரபல ஆசிரியர் -

**A/L 91**
I காப்புறுதி
II துரித மீட்டலும் வினா - விடையும்

**A/L 92**
I கூட்டுத்தாபனம்
II சந்தைப்படுத்தல்

[16712]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

# O/L

தீவக மாணவர்களின் நலன் கருதி
இறுதி பிரிவு 7
**DAY CLASSES**
[8-30 — 1-30]

**ஆரம்பம்:- 15 — 05 — 1991**

மு: குறிப்பு:- 1. எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
2. கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்.

[இ-4929]

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சரவணமுத்து தங்கராசா

[பிரபல வர்த்தகர் - ஐயர் கடை உரிமையாளர், கொழும்புத்துறை]

தோற்றம்: 16 - 07 - 1940 மறைவு: 24 - 04 - 1990

**திதி: 13 — 05 — 1991**

அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்றாகியும், தங்களின் நினைவில் நிஜமாய் மரணிக்காமல், நித்தமும் நாம் மரணிக்கின்றோம். எம் துயரம் உம் செவி ஏறாதா?

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
மனைவி, மக்கள்,
பெற்றோர், உறவினர்கள்.

இல. 19, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். [4065]

---

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 27 — 01 — 1944

மறைவு: 13 — 05 — 1990



## அமரர் ஞானமுத்து பிரான்சிஸ்

(D. S. O. மன்னார் மாந்தை, மேற்கு ப. நோ. கூ. ச.)

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, எங்களை எல்லாம் வழிகாட்டியதுடன் திடீரென எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்காக மல்வத்தை திருக்குடும்ப மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்; இதில் பங்கு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள், மனைவி,
மாமன், மைத்துனர்மார், மருமக்கள்,
உற்றார் உறவினர்கள்.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வத்தை, உடுவில். [16765]

---

## அமரர் கனகாம்பிகை தங்கராசா

அவர்களின்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



செந்தமிழ் நிலத்தில்: 12 - 08 - 1930 அந்தகன் நிலத்தில்: 14 - 04 - 1991

**திதி: பங்குனி அபரபக்கச் சதுர்த்தசி**

குலத்தின் நிலைக்களமாய்க் குடும்பத்தின் ஒளிச்சுடராய்
பலத்தின் விளைநிலமாய்ப் பாசத்தின் உறைவிடமாய்
என்றென்று முடனிருந்தே யெமதுயிருக் குயிராகி
நன்றுதினந் தினமாற்றி நமதுயிருக்குயிராகி
சென்றுமறைந் திருந்தாலுந் சிந்தையுறு தெய்வம் -நீ
கன்றுமன மனமிலாரும் கனகாம்பிகையம்மா!

இவரின் அந்தியேட்டிக் கிரியைகள் [13-05-1991] திங்கள் காலை சந்தை வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று அஸ்தி காரணித்தீர்த்தத்தில் கரைக்கப்படும். இக் கிரியைகளின் போது சமூகம் தந்து, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றாரையும், உறவினரையும், சுற்றத்தையும், சூழலையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

ச. தங்கராசா (பத்தர்)
குடும்பத்தினர்

சந்தை வீதி, உடுப்பிட்டி. [16685]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### முழுப் பட்டினி போடும் திட்டம்!

வடக்கு—கிழக்கில் கடந்த ஜூன் மாதத்தில் யுத்தத்தைப் பிரகடனப்படுத்திய அரசாங்கம், தமிழ்ப் பகுதிகள் மீது அறிவிக்காத பொருளாதாரத் தடையையும் விதித்தது. ஆயினும் வெளி உலகத்துக்கும் தனது மனித உரிமை மீறல் செயல் தெரியாமல் மறைப்பதற்காக, உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதாகக் காட்டிக் கொள்ள முனைந்தது. அதன் பொருட்டு தமிழ் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களில் பத்து வீதத்துக்கும் குறைவானவற்றை மட்டும் மாதாந்தம் கப்பலில் அனுப்பி வருகிறது.

போதிய உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களைத் தமிழர்களுக்கு அனுப்புவதாகக் காட்டிக்கொள்ள கப்பல் உணவுக்கு ஏற்பட்ட பிரசாரமும் கொடுக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்கள் பருத்தித்துறை வந்தடைய ஏற்பாடு செய்யப்பட்டது. அங்குள்ள துறைமுகம் கப்பல் போக்குவரத்துக்கு பூரண வசதி இல்லாதது. நீண்ட காலமாகக் கைவிடப்பட்டிருந்த ஒன்று. எனவே எந்தக் கால நிலையிலும் அங்கு சரக்குக் கப்பல் வந்து போகக் கூடியதாக அதனைத் திருத்தி, விஸ்தரிக்க உதவுவதாக அரசு கூறியிருந்தது. அமெரிக்க உதவி நிறுவனம் வழங்கும் பணத்தையும், துறைமுகத்தைத் திருத்துவதற்கு தந்து உதவுவதாகக் கூறப்பட்டது.

ஆனால் வழமைப் பிரகாரம் சொன்னது நடக்கவில்லை. நிதிவசதி இல்லாததால் துறைமுகத் திருத்த வேலைகள் ஸ்தம்பித்துள்ளன. கடல் நீர் வற்றியதால் உணவுப் பொருள்களைக் கப்பலில் இருந்து இறக்குவது பெரும் சிரமமான காரியமாக மாறியுள்ளது. மாதத்துக்கு ஒரு கப்பல் தானும் வந்து போக முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது தமிழ் மக்களை மேலும் வருத்தும், முழுப் பட்டினி போடும் திட்டம் ஆகும். நல்ல பிள்ளைக்கு நடித்து நாசம் செய்யும் வஞ்சகத் தனமாகும். தமிழ் மக்களைக் கொல்வதற்காக ஆயுதங்களை அவசர அவசரமாக வாங்கிக் குவிக்கும் அரசு அவர்களுக்கு உணவு போடும் என்று எதிர்பார்ப்பது எப்படி? அபிவிருத்திக்கென உலக நாடுகளிடம் பிச்சை ஏந்தி அதனைத் தமிழரைக் கொல்லவும், அவர்களின் தாயகத்தைப் பறிக்கவும் பயன்படுத்தும் அரசுக்கு தமிழ்ப் பகுதித் துறைமுகத்தைத் திருத்த நிதி கண்டுபிடிப்பது கஷ்டமாகத்தான் இருக்கும்.

அவையால் கப்பல் உணவும் இனிக் கிடைக்காது என்பதை உணர்ந்துகொண்டு, உள்ளூர் உணவு உற்பத்தியை விரைந்த வேகத்துடன் மேலும் இங்கு விரிவுபடுத்தவேண்டும். அதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னுரிமையுடன் மேற்கொள்ளப்படுதல் அவசியம். எங்கள் பண்ணில் இலகுவில் வளரக்கூடிய தானியங்களை மேலும் அதிக நிலப்பரப்பில் பயிரிட போர்க்கால வேகத்துடன் காரியம் ஆற்றவேண்டும். பட்டினியைத் தவிர்க்க அதுவே ஒரே ஒரு மார்க்கம். சொந்தக்கால்களில் நாம் நிற்பதற்கான முயற்சியும், பயிற்சியுமாக, பரீட்சார்த்தமாக அது அமையட்டும்!

# மேலும் சில முக்கிய தேர்தல் முடிவுகள்

**ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டே நகரசபை**

★ ஸ்ரீ. ல. சு. க.
— 20,679 வாக்குகள்
— 11 உறுப்பினர்கள்

★ ஐ. தே. க.
— 17,500 வாக்குகள்
— 8 உறுப்பினர்கள்

★ சுயேச்சை - 1
— 1266 வாக்குகள்
— 1 உறுப்பினர்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 1,103 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ந. ச. ச. க.
— 685 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**ஹட்டன் — டிக்கோயா நகரசபை**

★ ஐ. தே. க.
— 3235 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 1647 வாக்குகள்
— 2 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 173 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ சுயேச்சைக்குழு - 1
— 87 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**சிலாபம் பிரதேசசபை**

★ ஐ. தே. க.
— 14,140 வாக்குகள்
— 10 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 13,705 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

**வெலிகம நகரசபை**

★ ஐ. தே. க.
— 6173 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 2486 வாக்குகள்
— 2 உறுப்பினர்கள்

★ சுயேச்சை 1
— 973 வாக்குகள்
— 1 உறுப்பினர்

**கட்டுநாயக்கா — சீதுவை நகரசபை**

★ ஐ. தே. க.
— 7716 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 4814 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 167 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**அநுராதபுரம் நகரசபை**

★ ஐ. தே. க.
— 7908 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 6598 வாக்குகள்
— 4 உறுப்பினர்கள்

★ ம. ஐ. மு.
— 325 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ஸ்ரீ. ல. ம. க.
— 93 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**சீதாவாக்கபுர நகரசபை**

★ ஐ. தே. க.
— 4941 வாக்குகள்
— 8 உறுப்பினர்கள்

★ ம. ஐ. மு.
— 2789 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ ந. ச. ச. க.
— 381 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**குருநாகல் மாநகரசபை**

★ ஐ. தே. க.
— 6500 வாக்குகள்
— 9 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 1919 வாக்குகள்
— 8 உறுப்பினர்கள்

★ ந. ச. ச. க.
— 182 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ சுயேச்சை - 1
— 42 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 393 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**மஹர பிரதேசசபை**

★ ஸ்ரீ. ல. சு. க.
— 27,293 வாக்குகள்
— 12 உறுப்பினர்கள்

★ ஐ. தே. க.
— 26 148 வாக்குகள்
— 10 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 3,087 வாக்குகள்
— 1 உறுப்பினர்

★ ந. ச. ச. க.
— 280 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**பேலியகொடை நகரசபை**

★ ஐ. தே. க.
— 5828 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 3,39 வாக்குகள்
— 2 உறுப்பினர்கள்

★ ந. ச. ச. க.
— 1182 வாக்குகள்
— 1 உறுப்பினர்

**கேகாலை நகரசபை**

★ ஐ. தே. க.
— 3418 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

★ சுயேச்சை -1
— 3058 வாக்குகள்
— 4 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 14 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**மினுவாங்கொட நகரசபை**

★ ஐ. தே. க.
— 2372 வாக்குகள்
— 8 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 1196 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 143 வாக்குகள்
உறுப்பினர் இல்லை

**ஜாஎல நகரசபை**

★ சுயேச்சை - 1
— 5873 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ ஐ. தே. க.
— 5840 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

**பாணந்துறை நகரசபை**

★ ஸ்ரீ. ல. சு. க.
— 8160 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ ஐ. தே. க.
— 7411 வாக்குகள்
— 8 உறுப்பினர்கள்

**ஹொரணை நகரசபை**

★ ஐ. தே. க.
— 2525 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 2349 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ சுயேச்சை - 1
— 283 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**மாத்தறை நகரசபை**

★ கம்யூனிஸ்ட் கட்சி
9920 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

★ ஐ. தே. க.
— 8519 வாக்குகள்
— 4 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 200 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**தெஹிவளை - கல்கிசை மாநகரசபை**

★ ஐ. தே. க.
— 33,508 வாக்குகள்
— 15 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 30 926 வாக்குகள்
— 12 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 1,877 வாக்குகள்
— 1 உறுப்பினர்

★ ம. ஐ. மு.
— 1,805 வாக்குகள்
— 1 உறுப்பினர்

★ ந. ச. ச. க.
— 1,126 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— [illegible] வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**மொரட்டுவை நகரசபை**

★ ஐ. தே. க.
— 33,963 வாக்குகள்
— 16 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 25,558 வாக்குகள்
— 10 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 3,220 வாக்குகள்
— 1 உறுப்பினர்

★ ந. ச. ச. க.
— 674 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**பதுளை மாநகரசபை**

★ ஐ. தே. க.
— 6 753 வாக்குகள்
— 8 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 6,463 வாக்குகள்.
— 6 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 1052 வாக்குகள்
— 1 உறுப்பினர்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 576 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**கொழும்பு மாநகரசபை**

★ ஐ. தே. க.
— 1,19,798 வாக்குகள்
— 30 உறுப்பினர்கள்

★ சுயேச்சை 1
— 72,919 வாக்குகள்
— 17 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 11 043 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 10,028 வாக்குகள்
— 2 உறுப்பினர்கள்

★ ந. ச. ச. க.
— 2,027 வாக்குகள்
— 1 உறுப்பினர்

**கம்பளை நகரசபை**

★ ஐ. தே. க.
— 5,106 வாக்குகள்
— 8 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 3 203 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 993 வாக்குகள்
— 1 உறுப்பினர்

**மாலிம்பட பிரதேச சபை**

★ கம்யூ. கட்சி
— 6 590 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ ஐ. தே. க.
— 6 514 வாக்குகள்
— 4 உறுப்பினர்கள்

**கலவானை பிரதேசசபை**

★ ஐ. தே. க.
— 7,787 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ கம்யூ. கட்சி
— 5,957 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ சுயேட்சை குழு-1
— 599 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ஸ்ரீ. ல. ம. க.
— 68 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**பேருவளை நகரசபை**

★ சுயேட்சை -1
— 6,116 வாக்குகள்
— 5 உறுப்பினர்கள்

★ ஐ. தே. க.
— 5,986 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 1,816 வாக்குகள்
— 1 உறுப்பினர்

**களுத்துறை நகரசபை**

★ ஐ. தே. க.
— 8,115 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

★ ல. ச. ச. க.
— 5,253 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 817 வாக்குகள்
— 1 உறுப்பினர்

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 591 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**மாத்தறை பிரதேசசபை**

★ ஸ்ரீ. ல. சு. க.
— 12,780 வாக்குகள்
— 12 உறுப்பினர்கள்

★ ஐ. தே. க.
— 12 264 வாக்குகள்
— 9 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 926 வாக்குகள்
— 1 உறுப்பினர்

**சிலாபம் நகரசபை**

★ ஐ. தே. க.
— 7258 வாக்குகள்
— 9 உறுப்பினர்கள்

★ சுயேச்சைக் குழு
— 2040 வாக்குகள்
— 2 உறுப்பினர்கள்

**மாத்தளை மாநகரசபை**

★ ஐ. தே. க.
— 8,663 வாக்குகள்
— 9 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 3,961 வாக்குகள்
— 3 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. மு. காங்.
— 1157 வாக்குகள்
— ஓர் உறுப்பினர்

★ ந. ச. ச. க.
— 457 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ஸ்ரீ. ல. ம. க.
— 196 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**நுவரெலியா மாநகரசபை**

★ ஐ. தே. க.
— 6725 வாக்குகள்
— 7 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 2526 வாக்குகள்
— 2 உறுப்பினர்கள்

★ சுயேச்சைக் குழு 3
— 606 வாக்குகள்
— ஓர் உறுப்பினர்

★ சுயேச்சைக் குழு 1
— 546 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ சுயேச்சைக் குழு 2
— 854 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ஸ்ரீ. ல. ம. க.
— 291 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**நீர்கொழும்பு மாநகரசபை**

★ ஐ. தே. க.
— 26,237 வாக்குகள்
— 14 உறுப்பினர்கள்

★ சுயேச்சைக்குழு
— 12,946 வாக்குகள்
— 6 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 1,530 வாக்குகள்
— ஓர் உறுப்பினர்

★ ந. ச. ச. க.
— 1040 வாக்குகள்
— ஓர் உறுப்பினர்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 777 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**கண்டி மாநகரசபை**

★ ஐ. தே. க.
— 18,894 வாக்குகள்
— 13 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 18,762 வாக்குகள்
— 11 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. மு. காங்.
— 620 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ஸ்ரீ. ல. ம. க.
— 630 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ந. ச. ச. க.
— 304 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

★ ம. ஐ. மு.
— 276 வாக்குகள்
— உறுப்பினர் இல்லை

**வத்தளை பிரதேசசபை**

★ ஐ. தே. க.
— 28,859 வாக்குகள்
— 14 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. சு. க.
— 18,302 வாக்குகள்
— 8 உறுப்பினர்கள்

★ ஸ்ரீ. ல. ம. க.
— 2,633 வாக்குகள்
— ஓர் உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிவு - ஒரே பார்வையில்

| கட்சிகள் / சுயேச்சைகள் | மாநகர சபை 10 | நகர சபை 33 | பிரதேசசபை 194 | வெற்றி பெற்ற மொத்த சபைகள் |
|---|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 09 | 28 (போட்டியின்றித் தெரிவான கடுகண்ணாவை உட்பட) | 153 | 190 |
| சுதந்திரக் கட்சி | 01 | 02 | 33 | 36 |
| கம்யூனிஸ்ட் கட்சி | ... | 01 | 02 | 03 |
| சுயேச்சைக் குழு | ... | 02 | 02 | 04 |
| மக்கள் ஐக்கிய முன்னணி | ... | ... | 02 | 02 |
| இலங்கைத் தொழி காங். | ... | ... | 02 | 02 |

# ஒரு மாநகரசபை மட்டும் சுதந்திரக் கட்சியின் கையில்!

கொழும்பு, மே 13

நடைபெற்ற 10 மாநகர சபைகளுக்கான தேர்தலில் இரத்தினபுரி மாநகரசபையை மட்டுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கைபற்றியுள்ளது.

ஏனைய ஒன்பது மாநகர சபைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றி விட்டது.

கொழும்பு, தெஹிவளை-கல்கிசை, காலி, குருநாகல், நீர்கொழும்பு, நுவரெலியா, கண்டி, பதுளை, மாத்தளை ஆகியவையே ஐ.தே.க., கைப்பற்றிய ஒன்பது மாநகர சபைகளும் ஆகும். [ஒ-எ]

## யாழ். பல்கலைக்கழக மாணவருக்கு

# மகாபொல கொடுப்பனவு திடீரென இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்—பல்கலைக் கழக முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் இம் மாதத்துடன் இடை நிறுத்தப்பட இருப்பதாக அறியவருகிறது.

யாழ். பல்கலைக் கழகத்தில் இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில்—'மகாபொல' புலமைப்பரிசில் கொடுப்பனவு பெற தெரிவு செய்யப்பட்ட 316 மாணவர்களுக்கும்—கடந்த நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது.

கடந்த மார்ச்மாதம் தென் பகுதியில் நடைபெற்ற 'மகாபொல' கொண்டாட்டத்தில் வடபகுதி மாணவர்கள் கலந்து கொள்ளாததால் தான் கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் தென்னிலங்கையில் 'மகாபொல, கொண்டாட்டங்கள் நடந்த போது வடக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக போக்குவரத்து சீர்கெட்டு இருந்தது—இதனால் மாணவர்கள் 'மகாபொல' வில் கலந்து கொள்ள முடியவில்லை.

இதைக் கவனத்தில் எடுத்து சம்மந்தப்பட்ட மாணவர்களுக்கு மகாபொல கொடுப்பனவை வழங்கவேண்டும் என்று பல்கலைக் கழக நிர்வாகம் கேட்டுள்ளது. [ஓ-3]

## விபத்தில் போராளி மரணம்

யாழ்ப்பாணம், மே 13

கடந்த சனியன்று வவுனியா கனகராயன்குளத்தில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சைமன் [க. சந்திரபாலன்-தருமபுரம்] என்ற போராளி மரணமடைந்தார். [உ]

## மீண்டும் சூறாவளி அபாயம்

பங்களாதேஷில் மீண்டும் பெரும் சூறாவளி வீசும் ஆபத்து இருப்பதாக அந்நாட்டு வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர், இருபது வருடச் சரித்திரத்தில் பெரும் நாசகாரச் சூறாவளி வீசிய சிட்டாகொங் பிரதேசத்தையே மீண்டும் சூறாவளி தாக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சூறாவளி கருக்கொள்ளக் கூடிய தாழ்வமுக்கம் அந்தமான் தீவில் நிலைகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ]

## தெஹிவளையில் முறைகேடு

கொழும்பு, மே 18

தெஹிவளை - கல்கிசை மாநகர சபைத் தேர்தல்களின் போது பல முறைகேடுகள் நடந்தன என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. [உ-எ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 13

மட்டக்களப்பு மாவட்டம் தம்பிலுவில் களப்பு என்ற இடத்தில் கடந்த வெள்ளியன்று காலை இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலை புலிகள் இயக்கப் போராளி இருவர் வீரமரணம் அடைந்தார்.

சுமார் 30 நிமிடநேரம் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது. இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை.

தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த பவான், ஆனந்த் ஆகிய இரு போராளிகளுமே வீரமரணமடைந்தனர்.

## ஓய்வூதியம் இன்றி அவதி

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுயஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற்ற அரச ஊழியர்கள் இடைக்கால ஓய்வூதியம் இன்றி பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதியில் அமைந்திருக்கும் முல்லைத்தீவு செயலகத்தில் இந்த ஓய்வூதியர்களின் தனிநபர் கோவைகள் சிக்கியுள்ளன. அதனால் அவர்களது சேவை விவரம் பெறமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவே ஓய்வூதியம் வழங்குவதில் இழுபறிநிலை ஏற்படுவதற்கான காரணம் என்று கூறப்படுகிறது. [ஒ-126]

## குர்டிஷ் பாதுகாப்புக்கு ஐ. நா. பொலீஸ்

ஈராக்கின் வடக்குப் பகுதியில் வாழும் குர்டிஷ் இன மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அங்கு ஐ நா பொலீஸ் படை ஒன்றை அனுப்ப வேண்டும் என்று கூறும் தீர்மானம் ஒன்றை ஐ நா. பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த யோசனையை ஈராக் அரசு ஏற்கனவே நிராகரித்து விட்டது.

அதனைத் தொடர்ந்தே அமெரிக்கா இந்த யோசனையை ஒரு தீர்மானமாக ஐ. நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கவுள்ளது.

ஈராக் வடக்கில் நிறுவியுள்ள குர்டிஷ் அகதி முகாம்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஐ. நா. பொலீஸ் படை ஏற்ற பின்னரே அங்கு நிலை கொண்டுள்ள நேசநாடுகளின் படைகள் வெளியேறும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. [ஐ-ஏ]


# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி

## தற்காலிக அனுமதி — க. பொ. த. (உ/த) வகுப்பு (1993)

இக் கல்லூரிகளிலிருந்து க. பொ. த. [சா/த] 1990 பரீட்சைக்கு விண்ணப்பம் செய்த மாணவர்கள் க. பொ. த. [உ/த] 1993 வகுப்புக்குத் தற்காலிக அனுமதி கோர விரும்பின் தத்தமது கல்லூரிக் காரியாலயங்களில் தங்கள் பெயர்களை 18 - 5 - 1991 க்கு முன் பதிவும்; தெரிவுப் பரீட்சை 23 - 5 - 1991 இல் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம்
11 - 5 - 1991.

அதிபர்கள்
யாழ். இந்துக்கல்லூரி,
வேம்படி மகளிர் கல்லூரி

[இ-5502]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13 - 05 - 1991 இல் வெளியிடப்பட்டது.

# நேபாளத்தில் நேற்றுதேர்தல் இன்று முடிவு வெளியாகும்

காத்மண்டு, மே 13

நேபாளத்தில் 32 ஆண்டு கால இடைவெளியின் பின்னர் பல அரசியல் கட்சிகள் கலந்து கொண்ட சுதந்திரப் பொதுத்தேர்தல் நேற்று நடந்தது.

வன்செயல்கள் அங்கும் இங்குமாக இடம்பெற்றிருந்தாலும், பொதுவாக அமைதியான சூழ்நிலையில் வாக்களிப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

20 5எம்.பிக்களைத் தெரிவு செய்வதற்காக நடந்த இத் தேர்தலில் ஒரு கோடி 10 லட்சம் பேர் வாக்களிக்கும் தகுதி பெற்றிருந்தனர்.

தேர்தல் முடிவுகள் இன்று [திங்கள்] வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-எ]

## எம். எல். ஏ. கடத்தல் எதிரொலி:

# நக்ஸலைட்டுகள் நால்வர் ஆந்திராவில் விடுவிப்பு

ஹைதராபாத், மே 13

நக்ஸலைட் தீவிரவாதிகளின் நிபந்தனையை ஏற்று ஆந்திர மாநிலம், ஹைதராபாத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த 4 நக்ஸலைட் தீவிரவாதிகள் நேற்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏயான திரு. சுதீர் குமார் நக்ஸலைட்டுக்களினால் கடத்தப் பட்டார் என்பதும் —

சிறை வைக்கப்பட்டுள்ள தமது கோஷ்டியினர் நால்வரை விடுவித்தால் மட்டுமே கடத்தப்பட்ட எம். எல்.ஏயை விடுவிக்க முடியும் என்று அவர்கள் நிபந்தனை விதித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்தே நேற்று 4 நக்ஸலைட்டுக்கள் விடுவிக்கப்பட்டனர் என்றும் —

இவ்விடுவிப்பை அடுத்து திரு. சுதீர்குமார் எந்நேரமும் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஓ-த]

## வடக்கு, கிழக்கிற்கு

# நியமனமான 80 டாக்டர்கள் இன்னும் பதவி ஏற்கவில்லை!

யாழ்ப்பாணம், மே 13

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளுக்கும் புதிதாக நியமிக்கப்பட்ட டாக்டர்கள் இன்னும் தமது பதவிகளை ஏற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள 80 டாக்டர் பதவிகளுக்கு கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி இவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் வட்டம் பெற்ற டாக்டர்களை வடக்கு-கிழக்கு மாகாணங்களிலேயே நியமிப்பது என்ற திட்டத்தின் கீழ் இவர்களுக்கு இங்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் இவ்வாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குள் மட்டும் இவர்களை நியமித்திருப்பது என்ற முடிவை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாலும் —

வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டோரும், பிராந்திய ஆஸ்பத்திரிகளுக்கு நியமிக்கப்பட்டோரும் திருகோணமலையில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு அலுவலகத்துக்குச் சென்று தமது நியமனங்களை ஏற்க வேண்டும் என்று பணிக்கப்பட்டதாலும் —

புதிதாக நியமிக்கப்பட்டோர் பதவி ஏற்கும் விடயம் இழுபறி நிலையில் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## பொறியியலாளர் கடத்தல்

இஸ்லாமபாத், மே 13

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் வைத்து இனந்தெரியாதோரால் இரண்டு சீன பொறியியலாளர்கள் கடத்தப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.


# மரண அறிவித்தல்

## அத்தனாஸ் சிங்கராயர் [கணக்கர்[

ஏழாலையை பிறப்பிடமாகக் கொண்டவரும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான அத்தனாஸ் சிங்கராயர் அவர்கள் 11 - 5 - 91 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அத்தனாஸ் - ரோசம்மாவின் அன்பு மகனும், சி. திரேசம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரியின் அன்புத் தந்தையும், அருளையா, நேசையா, நேசம்மா, நல்லம்மா, நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனுவேற்பிள்ளையின் மருமகனும், துரைராசா, இன்னராசா, புஷ்பம், ஞானப்பிரகாசம், இராயப்பு, பீற்றர்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், ஆரோக்கியநாதன் [ஜேர்மனி], தங்கராசா, இன்பராசா, ரவீந்திரன், ஜெயராணி, றேஸ்மலர்ராணி புஷ்பராணி, குணராசா [ஜேர்மனி], ஞானராசா [டென்மார்க், யோகராசா, நேசன்மாமா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்துக்காக 13-5-91 இன்று மாலை 3 மணிக்கு யாழ் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

இல 32/10 அச்சக்கூட வீதி, சண்டிலிப்பாய்,
யாழ்ப்பாணம்.

பீ. அருள்நேசன்மாமா
[மருமகன்]

[16714]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org